**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

*******************

**ஊடக அறிக்கை**

**கௌரவ சபாநாயகருடன் உயர் ஸ்தானிகர் சந்திப்பு**

கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களை இந்திய உயர் ஸ்தானிகர் அவர்கள் 2021 பெப்ரவரி 17 ஆம் திகதி அவரது இல்லத்தில் சந்தித்திருந்தார். சபாநாயகருக்கு தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்த உயர் ஸ்தானிகர், கொவிட்-19 க்கு எதிராக இலங்கை மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்காக வும் வாழ்த்துக்களை பகிர்ந்துகொண்டார். இலங்கையில் தடுப்பூசி திட்டமானது மிகவும் சுமூகமான முறையில் முன்னெடுக்கப்பட்டமையை பாராட் டிய இந்திய உயர் ஸ்தானிகர் , இந்த விடயத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்கும் மிக முக்கியமான வகிபாகத்தை இந்தியா கொண்டிருப்பதையிட்டு தனது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தி னார். இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 5 லட்சம் தடுப்பூசிகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ அவர்கள் நேரடியாக பெற்றுக்கொண்டமையையும் இந்த சந்தர்ப்பத்தில் அவர் நினைவூட்டினார். அதுமட்டுமல்லாமல் நோய்த்தொற்றுக்கு எதிராக இலங்கையும் இந்தியாவும் வலுவான ஒத்துழைப்புடன் தொடர்ந்து செயற்படும் எனவும் அவர் உறுதியளித்திருந்தார்.

2. இந்தியாவும் இலங்கையும் ஜனநாயக பெறுமானங்கள் மற்றும் பாரம்பரியங்களை பகிர்ந்து கொண்டிருப்பதாக இந்த சந்தர்ப்பத்தில் உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார். அத்துடன் இலங்கை மக்களுக்கும் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கும் தேவையான சேவைகளை வழங்குவதற்கு தனது முழு ஆளுமையையும் பயன்படுத்துவது இந்தியாவுக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய கௌரவமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

3. இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அவர்களின் பி ரசன்னத்துடன் கொழும்பு நாரஹேன்பிட்டியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் கௌரவ சபாநாயகர் அவர்களுக்கு இந்தியாவால் பரிசளிக்கப்பட்ட தடுப்பூசி ஏற்றப்பட்ட சந்தர்ப்பத்திலும் உயர் ஸ்தானிகர் பிரசன்னமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்

4. அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாகர் கொள்கைகளின் வழிகாட்டுதலுடன் 2021 ஜனவரி 20 ஆம் திகதி முதல் இந்து சமுத்திர ம், வளைகுடா மற்றும் அயல் பிராந்தியங்களில் உள்ள நாடுகளுக்கும் மில்லியன் கணக்கான தடுப்பூசி மருந்துகளை இந்தியா பரிசளித்துள்ளது. இதற்கு மேலதிகமாக தூரதேசத்தில் இருக்கும் லத்தீன் அமெரிக்கா , கரீபியன் மற்றும் பசுபிக் பிராந்திய நாடுகளுக்கும் பல மில்லியன் கணக்கான தடுப்பூசி மருந்துகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

**************

கொழும்பு

17 பெப்ரவரி 2021